ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1971/9 - 2016 ජූනි 14 වැනි අඟහරුවාදා - 2016.06.14
*1971/9 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் ஜோன் என்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில், கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில், இல. 204, கல்குடா கிராம உத்தியோகத்தர் பிரிவில், பட்டிஅடிச்சேனை கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் 2016.01.27ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. பீரீ/கேஆர்பி/2015/250 இல் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்ட சுமார் 2.9078 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - பச்சைமடுக்காடு, முதியன்மடுக்காடு - விஸ்தீரணம் : சுமார் 2.9078 ஹெக்டயார்ஸ்**

வடக்கு : வாழைச்சேனையில் இருந்து கல்குடா வரையான வீதி (வீ.அ.அ.); கிழக்கு : எஸ். நற்குணம், கே. கித்னன் ஆகியோர் உரிமை கோரும் பச்சைமடுக்காடு, முதியன் மடுக்காடு காணி; தெற்கு : கே. கித்னன் உரிமை கோரும் பச்சைமடுக்காடு, முதியன்மடுக்காடு காணி; மேற்கு: நற்குணம் விமலேந்திரன் உரிமை கோரும் பச்சைமடுக்காடு, முதியன்மடுக்காடு.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,
காணி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/4/2015/எல்ஓ/187.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2016.05.24.

07-63

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.